# புலிகளுக்கு அஞ்சி 13 பொலிஸார் தப்பியோட்டம்!

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 06 இதழ் 224
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 22—09—1992

(வவுனியா)
வவுனியா மாவட்டத்திற்கு அருகிலுள்ள ஓடாகொச்சிக் குடுவ என்ற இடத்தில் சிங்களக் கிராமவாசிகளின் பாதுகாப்புக்கென நிறுத்தப்பட்டிருந்த 30 பொலிசாரில் 13

(4-ம் பக்கம் பார்க்க)

## படகு கடத்தல் விவகாரம்:

## கடற்படையினர் மலர் நீதிமன்றில் நிறுத்தப்படுவர்

(கொழும்பு)
மண்டைதீவுக் கடலில் விடுதலைப் புலிகளால் கடற்படையினரின் படகு அண்மையில் கைப்பற்றப்பட்டது தொடர்பாக, இராணுவ நீதிமன்றத்தின் முன் கடற்படையினர்

(4-ம் பக்கம் பார்க்க)

## 20 சிப்பாய்களுக்கு எதிராக விரைவில் விசாரணை!

(கொழும்பு)
20 இராணுவத்தினருக்கெதிராக இராணுவ நீதிமன்றத்தில் விரைவில் விசாரணைகள் ஆரம்பமாகவுள்ளதாக

(4ம் பக்கம் பார்க்க)

# புலிகளின் அதிரடி தாக்குதலில் 32 ராணுவத்தினர் கிழக்கில் பலி

(மட்டக்களப்பு)
கிழக்கு மாகாணத்தில் நேற்றுக்காலை விடுதலைப்புலிகள் நடத்திய இரு அதிரடித் தாக்குதல்களில் 32 இராணுவத்தினர் பலியானார்கள். நவீனரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. விடுதலைப்புலிகள் தரப்பில் மூன்று போராளிகள் வீரச்சாவு அடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு காயங்கேணி இராணுவ முகாமிலிருந்து நாவலடி இராணுவ முகாம் நோக்கி சோந்து சென்று கொண்டிருந்த படையினரை முகாமிலிருந்து மூன்னூறுயார் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதலை நடத்தினர்.

நேற்று அதிகாலை 6-30 மணியளவில் நடைபெற்ற இத் தாக்குதல் 7 நிமிடம் வரை நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் 23 படை

(4ம் பக்கம் பார்க்க)

## 20 நவீன துப்பாக்கிகள் உட்பட பல ஆயுதங்கள் மீட்பு

(மட்டுநகர்)
மட்டக்களப்பில் நேற்று இடம் பெற்ற தாக்குதலில 60 மி.மீ. மோட்டார் மற்றும் ஏ.கே. இலகு இயந்திர துப்பாக்கிகள் உட்பட 20 நவீன ரக துப்பாக்கிகளையும் புலிகள் கைப்பற்றினர்கள்கைப்பற்றப் பட்ட ஏனைய ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ 60 மி.மீ. மோட்டர் - 1
★ ஏ.கே. இலகு இயந்திர துப்பாக்கிகள் - 2
★ அதற்குரிய ரவைக்

(4-ம் பக்கம் பார்க்க)

## மண்கிண்டி காவலரண் புலிகளால் முற்றாக அழிப்பு

(யாழ்ப்பாணம்)
கிழக்கில் மணகிண்டி இராணுவ முகாம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை 1-10 மணியளவில் நடத்திய தாக்குதலில் அங்கிருந்த காவலரண் முற்றாக அழிக்கப்பட்டது

மண்கிண்டி இராணுவ முகாமிலிருந்து 500 யார் தொலைவில் அமைந்திருந்த காவலரண் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாககுதலில் அதில் இருந்த இராணுவத்தினர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர்.

காவலரண் முற்றாக அழிக்கப்பட்டதுடன், காவலரணில் இருந்த ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

(4ம் பக்கம் பார்க்க)

## சிறிமாவைப் பேட்டிக்கு அழைக்கிறார் 'பிரேமா'

(கொழும்பு)
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உள் கட்சிப் பூசல்கள் வெகுவாக அதிகரித்துள்ளதாகவும், கட்சியின் தலைமைப் பதவிக்கு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் மகனும், மகளும் ஆசைப்படுவதால் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டிய நிலையில் உள்ளதாக ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில்

(4-ம் பக்கம் பாாக்க)

## 3 புலிகள் வீரச்சாவு

(மட்டுநகர்)
மட்டக்களப்பில் நேற்று இராணுவத்துடன் இடம் பெற்ற மோதலில் மூன்று புலிகள் வீரச்சாவு அடைந்தனர்.

லெப். சஞ்சீவன் (குஞ்சித்

(4ம் பக்கம் பார்க்க)

## தடுத்துவைக்கப்பட்டிருக்கும் 26 தமிழ் இளைஞர்கள் விபரம்

(யாழ்ப்பாணம்)
ஸ்ரீ லங்காப்படையினரால் கைது செய்யப்பட்டு மகசீன் சிறையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 26 தமிழ் இளைஞர்களின் விபரம் வருமாறு:

குமாரசாமி சத்தியசிலன் உடுவில் தெற்கு மானிப்பாய், யோண்பொஸ்கோ இருதயநாதன் தலையாடி, பசுபதி அமிர்தலிங்கம் தாவடி வடக்கு கொககுவில், ஆனந்தி சூரிய

(4ம் பக்கம் பார்க்க)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)
தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குதல் தொடர்பாக கோட்டக்கல்வி அலுவலகங்களில் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது. நேர்முகப்பரீட்சை சாவகச்

(4ம் பக்கம் பார்க்க)

## 2100 அடையாள அட்டைகள் செயலகத்திற்கு வந்தன

(யாழ்ம்பாணம்)
இரண்டாயிரத்துநூறு அடையாள அட்டைகள நேற்று யாழ். செயலக ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு வந்தன

இவற்றுள் பாடசாலை மாணவர்களுக்கான 203 அடையாள அட்டைகளும், புதிய அவசர, சாதாரண விண்ணப்பங்களுக்கான 1334 அடையாள அட்டைகளும், இணைப் படிவங்களுக்கான [தொலைந்த, திருத்தம் செய்தல்] 264 அடையாள அட்டைகளும், 1972/73ம் ஆண்டுகளில் வழங்கப் பட்டவற்றுக்குப் பதிலாக புதுப்பித்து வழங்கப்படும் 290 அடையாள அட்டைகளும் அடங்குகின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் பி.பி.ஸி. நிருபர்

(யாழ்ப்பாணம்)
லண்டன் பி. பி. ஸி. தொலைக்காட்சி நிருபர் தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இவர் நேற்று யாழ். நவீன சந்தைக் கட்டிடத்தையும் அதன் இடிபாடுகளையும் வீடியோ படம் பிடித்துச் சென்றார். (159)

## கிளாலி பாதைக்கு முற்றாகத் தடையாம்

(கொழும்பு)
கிளாலிப் பாதை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாக கூட்டுப் படையினர் நேற்று மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

பொதுமக்கள்இப்பாதையை பாவிக்கவேண்டாம் எனவும் இதனல் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு பொதுமக்களேபொறுப்புஏற்க வேண்டும் என்றும் மீண்டும் வலியுறுத்திக்கூறியுள்ளனர்

## குளம் திருத்தி — நீர் வளம் பெருக்குவோம்

## "இந்திய-இலங்கை ஒப்பந்தம் முற்றுப்பெற்றுவிட்டது"

### ஜே. ஆர். தெரிவிப்பு

(கொழும்பு)
இலங்கை இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக 1987இல் செய்து கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் முற்றுப்பெறறு விட்டதாக அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ஜே ஆர். ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நிருபர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: தற்போதைய நிலைக்கு இவ் ஒப்பந்தம் ஏற்றதல்ல

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### புதிய வெளியீடு

உங்கள் குழந்தைகள் படித்து மகிழ இனிய பாடல்கள் படங்களுடன் வெளிவந்துள்ளது. "ராஜாப் பூ" பூந்தோட்டம், நொடியும் விடையும், பொறுக்கிய முத்துக்கள் ஆகிய நூல்களும் எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆசிரியர் "கோப்பாய் சிவம்". (எ-2452)


## தாதிய உத்தியோகத்தர் நியமனம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயில் இயங்கிவரும் தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் ஆறு புதிய தாதிய உத்தியோகத்தர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளனர். (72)

## கொடுப்பனவு வழங்கப்படவில்லை

(மட்டுவில்)

யாழ். பல்கலைக்கழக 'கெல்ற்' மாணவர்களுக்குரிய கொடுப்பனவு கடந்த ஆண்டும் இவ்வாண்டும் வழங்கப்படவில்லை. ஆனால் தென்பகுதி மாணவர்களுக்குரிய கொடுப்பனவு மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. (159)

## மாணவிக்கு புலமை பரிசில்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கைச்சங்கீதசபைப் பரீட்சை தரம் IV பரதநாட்டியத்தில் முதலாம் பிரிவில் சித்தியடைந்த செல்வி அஜந்தினி இராஜசேகரத்துக்கு மேலும் அப்பிரிவில் பயிற்சி பெறும் பொருட்டு ராமகிருஷ்ணலய நுண்கலைக்கல்லூரி இயக்குனர் திரு. இ. ராஜா மகேந்திரசிங்கம் புலமைப் பரிசு வழங்கியுள்ளார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவியான செல்வி அஜந்தினி ராமகிருஷ்ணலய நுண்கலைக் கல்லூரி பரதநாட்டிய பிரிவில் பரதம் பயின்று வருகிறார். வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சையின் வெவ்வேறு பிரிவுகளில் தோற்றிய ராமகிருஷ்ணலய நுண்கலை கல்லூரி மாணவர்களுள் 31 பேர் 1ம் பிரிவில் சித்தியடைந்து சாதனை படைத்துள்ளார்கள். (சி)

## இராசி பலன்

22-09-1992

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி 06)

ஏகாதசி பி. இ. 2-21 வரை பூசம் ந.இ. 12-22 வரை சித்தயோகம் ஏகாதசி விரதம், இராகுகாலம் மாலை 3-02 முதல் 4-3 வரை, சுபநேரம் காலை 10-2 முதல் 12-02 வரை.

மேஷம்: தொழில்கெடுபிடி குடும்ப பிரச்சனை, அலைச்சல்

இடபம்: மாமனார் உதவி, தொழில்சிறப்பு, பயணம்.

மிதுனம்: ஜீவன துன்பம், மறைமுக செலவு, விவாதம்.

கடகம்: தனலாபம், பதவி உயர்வு, வெற்றிவாய்ப்பு

சிங்கம்: புத்திரவழி சிக்கல் காரியத்தடை, வேதனை

கன்னி: கருத்து மாறுபாடு புதியசிந்தனை, வெறுப்பு

துலாம்: உயர்வருமானம் குடும்ப சிறப்பு பாராட்டு

விருச்சிகம்: பயணதுன்பம் பெண்பகை, ஏமாற்றம்,

தனுசு: உடல் உபாதை, கருத்துமோதல் வேண்டாத தொல்லை.

மகரம்: குடும்ப சிறப்பு, தம்பட்டம்.

கும்பம்: ஒத்துப் போதல், கடும் உழைப்பு பொதுப்பணி

மீனம்; உறவுவிரிசல், வயிற்றில் ரோகம் பணமுடை.

- ஜோஸ்யர்

# குடியிருப்பு பகுதிநோக்கி ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலி முகாமிலிருந்து வலி மேற்குப்பகுதி நோக்கி நேற்று முன் தினமிரவு தொடர்ந்து ஷெல்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது.

இரவு 10 மணி தொடக்கம் 11 மணிவரைக்குட்பட்ட நேரத்தில் குடியிருப்புப்பகுதிகளில் வீழ்ந்து வெடித்துள்ளது.

வலந்தலை முகாமிலிருந்து நேற்றுமுன் தினமிரவு பொன்னாலை கரையோரப்பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல்கள் அப்பகுதியில் வீழ்ந்து வெடித்துள்ளது. (56)

## சிற்றூழியர்— பதவி உயர்வுக்கான போட்டிப் பரீட்சை

(திருநெல்வேலி)

அரசாங்க காரியாலயங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமைபுரியும் சிற்றூழியர்களை எழுதுநர் (தரம் 2) க்கு பதவி உயர்த்துவதற்கான போட்டிப்பரீட்சை இம்மாதம் 25ம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதற்கான அறிவித்தலை யாழ். அரச அதிபர் செயலகங்களுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கு யாழ். மாவட்டத்திலிருந்து நூற்றுக்கணக்கானோர் தோற்றவுள்ளனர்.

நல்லூர் பிரதேச செயலகத்திலிருந்து மட்டும் 25க்கு மேற்பட்ட ஊழியர்கள் செல்லவுள்ளனர். (157)

## வீடமைப்பு மானியம் பெற 20 பேருக்கு முன்னுரிமை

(கொழும்புத்துறை)

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் வீடமைப்பு மானியம் பெற சமூக அபிவிருத்திக்குழுவால் தெரிவு செய்யப்பட்டோரில் 20 பேர் பிரதேச மட்ட வீடமைப்புக் குழுவால் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அப்பட்டியல் பொதுமக்கள் பார்வைக்காக நல்லூர் மாநகராட்சி மன்ற அலுவலகம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஆகியவற்றில் வைக்கப்பட்டுள்ளது

இத்தெரிவு சம்பந்தமாக ஏதாவது முறைப்பாடுகள், ஆட்சேபனைகளை பொதுமக்கள் தெரிவிக்க விரும்பினால், அடுத்தமாதம் 1ம் திகதிக்கு முன்னர் எழுத்துமூலம் தெரியப்படுத்துமாறு யாழ். மாநகர ஆணையாளர் திரு. வே. பெ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார். (154)

## நாடகக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்

(புலோலி)

நாடகக்கலைக்கு சேவைகள் புரிந்த வடமராட்சியைச் சேர்ந்த இரு கலைஞர்கள் பட்டமளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இப்பட்டமளிப்பு வைபவத்தில் துன்னாலையைச் சேர்ந்த கலைஞர் எஸ். பரராஜசிங்கத்திற்கு 'நாடகச் சக்ரவர்த்தி' என்ற பட்டத்தை வடமராட்சி கோட்டக் கல்விப் பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

பருத்தித்துறையைச்சேர்ந்த நாடகக்கலைஞர் திரு. ஏ. ஜே. அருள்தாசனுக்கு நாடகச்செம்மல் என்ற பட்டத்தை வழங்கி பிரபல கவிஞர் கரவைக் கிழார் வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

துன்னாலை கோவிற்கடவை பிள்ளையார் கோவில் சங்காபிஷேகதின விழாவில் வைத்து இப்பட்டமளிப்பு வைபவம் நடைபெற்றது. (61, 52)

## இன்றைய உதைபந்தாட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 17 வயது, 19 வயது மாணவர்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இன்றைய ஆட்டம்:

யாழ். கோட்டம்: 17வயது யாழ். புனித ஜேம்ஸ் எதிர் நாவாந்துறை றோ. க. வி, கொக்குவில் இந்து எதிர் யாழ் இந்து. இவ்விரு போட்டிகளும் சென். பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெறும்

மருதனாமடம் கோட்டம்- 17 வயது 'பி' மானிப்பாய் மெமோறியல் எதிர் உரும்பிராய் இந்து. 19 வயதுபிரிவு: இணுவில் சைவப்பிரகாசா எதிர் ஸ்கந்தா. இவ்விரு போட்டிகளும் உரும்பிராய் இந்துவில் நடைபெறும்.

தென்மராட்சி கோட்டம்: 17 வயது பிரிவு - கொடிகாமம் திருநாவுக்கரசு எதிர் மட்டுவில் மகா வித்தியாலயம், விடத்தற்பளை வித்தியாலயம் எதிர் மிருசுவில் அ. த. க. இவ்விரு போட்டிகளும் சாவகச்சேரி இந்துவில் நடைபெறும். (சி)

## குடும்ப அட்டை மீளபரிசீலனை

(நெல்லியடி)

கரவெட்டி பிரதேச செயலகத்தில் குடும்ப அட்டைகள் மீள்பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. குடும்பத்தவர்கள் தமது குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை, பிறப்புச்சான்றிதழ் ஆகியனவற்றை சமர்ப்பிக்கவேண்டுமென வேண்டப்படுகின்றனர். (160)

## அரிச்சுவடி இலவசம்

(யாழ்ப்பாணம்)

விஜயதசமி தினத்திலே வித்தியாரம்பம் செய்துவைக்கவுள்ள வித்தியாசாலைகள், ஆலயங்கள் தங்களுக்கு வேண்டிய பனை ஓலை அரிச்சுவடிகளை எழுத்தில் விண்ணப்பித்து தம்மிடமிருந்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாமென மில்க்வைற் அதிபர் அறியத் தருகிறார். (அ)

# உதைபந்தாட்ட 'சுற்றுப் போட்டி

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட விளையாட்டுக் குழுவினரால் நடாத்தப்படவுள்ள உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை 23-ந் திகதி முதல் அக்டோபர் மாதம் 5-ந் திகதி வரை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

நாளை 23-ந் திகதி 17 வயதுக்குட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் எதிர் வட்டு இந்துக்கல்லூரியும், நடேஸ்வராக்கல்லூரி எதிர் அராலி இந்துக்கல்லூரியும் மோதுகின்றன.

இம்மாதம் 24-ந் திகதி 17 வயதுக்குட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மல்லாகம் மகாவித்தியாலயம் எதிர் சுழிபுரம் விக்டோரியாக்கல்லூரியும், அளவெட்டி அருணோதயாக்கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியும் மோதுகின்றன [139]

## மேஜர் முரளி நினைவு தடகள போட்டி

### பரு. கொத்தணி முதலாமிடம்

[உடுப்பிட்டி]

மேஜர் முரளி நினைவை முன்னிட்டு கொத்தணி பிரிவுகளுக்கிடையிலான வடமராட்சி கல்விக்கோட்ட மட்ட தடகள போட்டி அண்மையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

கொத்தணி பாடசாலைப் பிரிவு ரீதியாக பங்குபற்றிய மேற்படி போட்டியில் பருத்தித்துறை கொத்தணி 72 புள்ளிகளைப்பெற்று முதலிடம் வகித்தது.

பருத்தித்துறை கொத்தணிப் பிரிவில அமைந்த அல்வாய் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை பல நிகழ்ச்சிகளில் முதன்மைப் பரிசில்கள் பெற்று 44 புள்ளிகளைப் பெற்றுக்கொடுத்தது.

இறுதிநாள் போட்டியில் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை மகளிர்களுக்கான வலைபந்தாட்டப்போட்டியில் வல்வெட்டித்துறை மகளிர் கல்லூரி 19 புள்ளிகளையும், பருத்தித்துறை மகளிர் கல்லூரி 12 புள்ளிகளையும் பெற்றன.

விக்னேஸ்வராக்கல்லூரியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆடிய உதைபந்தாட்டத்தில் நெல்லியடி மத்திய ம. வி. 3 கோல்களைப்போட்டு வெற்றிபெற்றது விக்னேஸ்வராகக் கல்லூரியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி கயிறு இழுத்தல் போட்டியில் ஹாட்லிக் கல்லூரி வெற்றிபெற்றது. வல்வை மகளிர் கல்லூரியை எதிர்த்து ஞானசாரியார் மகளிர் கல்லூரி கயிறு இழுத்தல் போட்டியில் ஞானசாரியார் கல்லூரி வெற்றி பெற்றது. (150-160)

## பால்மா விநியோகம்

[அரியாலை]

யாழ் - பவுண்ட் கார்மல் வீதியிலுள்ள ஜுப்பிலி சுகாதார மருத்துவ நிலையத்தில் கடந்த 7-ந் திகதி குழந்தைகள் உள்ள தாய்மார்களுக்கு இலவசமாக திரிபோசா பால்மா வழங்கப்பட்டது.

கையிருப்பு முடியும்வரை இந்தப் பால்மா வழங்கப்படுமென அங்குள்ள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (59)

## அகதிகளுக்கு 800 பாய்கள்

(வட்டுக்கோட்டை)

வடமாகாண தென்குபனம் பொருள் கூட்டுறவுச்சங்கங்களின் சமாஜம், வாதரவத்தை அக்காச்சி கிராம புற்பாய் உற்பத்தி நிலையத்தில் சுமார் 800 புற்பாய்களைக் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த அகதிகளுக்கு விநியோகித்துள்ளது. (139)


## பயிலுனர் தேவை

அச்சுக்கோப்பாளர்—அச்சு இயந்திர வேலை பழகுவதற்கு பயிலுனர் தேவை. G. C. E. O/L ல் 6 பாடங்களில கணிதம், தமிழ் உட்பட சித்தியடைந்தோர் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 30-9-92

விளம்பர இல. A-2458,

C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம்.

[ஏ-2458]



# தியாகி திலீபனின்

## 5-வது ஆண்டு நினைவு தினம்

உரிமைக்காய் உன்னை நீ அழித்தாய்
எம் நெஞ்சில் என்றும் நீ வாழ்கின்றாய்
பாரினிலே உன்புகழை
பாடுகின்றோம் இன்று நாம்.

பச்சிலைப்பள்ளி

தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்

பளை.

[சி-6826]

# தமிழர்க்கு நஷ்டஈடு இல்லை

## சிங்களவர்க்கு குடியேற்ற உதவி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நஷ்ட ஈடுகோரி தமிழர்கள் விண்ணப்பித்த 400 விண்ணப்பங்களின் கொடுப்பனவுகள் கொடுபடாது முடங்கிக் கிடக்கின்றன எனத் தெரிய வருகின்றது.

10½ கோடி ரூபா விற்கான இவ்விண்ணப்பங்கள் இருந்த போதிலும் யூன் மாதத்தில் 60 லட்சம் ரூபா கொடுக்கப்பட்டது யூலை மாதத்தில் எந்த வித கொடுப்பனவும் கொடுக்கப்படவில்லை, ஏறுவூர், மண்முனை போன்ற இடங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் நஷ்டஈடு எதுவும் கொடுக்கப்படவில்லை எனவும் அறிய வருகிறது.

இதனிடையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் குடியேறிய 56 சிங்களக் குடும்பங்களுக்கு மீளக் குடியேற்ற நிவாரணம் வழங்கப்பட்டதோடு, இவர்களின் நலன்களைக் கவனிக்க 24 நலன்புரி நிலையங்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சு)

# நாய்க் கடிக்கு

## 200 பேர் இலக்காயினர்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் இம்மாதத்தில் 200 பேர் வரை நாய்க்கடிக்குள்ளாகியிருக்கின்றனர் இவர்களில் 20 பேர் விசர் நாய்க்கடிக்குள்ளானவர்களாவர்.

முதலாம் திகதியிலிருந்து 20ம் திகதி வரையில் நாய்க்கடிக்குள்ளானவர்களுக்கு சிகிச்சையளிக்க தடுப்பு சி மருந்துகள் இல்லாதநிலை ஏற்பட்டுள்ளது.

சாவகச்சேரி, பருத்தித்துறை, மானிப்பாய், தெல்லிப்பளை, சங்கானை, பண்டத்தரிப்பு, பளை, வரணி ஆகிய வைத்தியசாலைகளில் நாய்க்கடிக்குள்ளானவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். (56)

### சரித்திரம் படைத்த திலீபன்

பல்லவி

பாரதப் படைகளின் ஆதிக்கக் கரங்களை
பார் அறிந்திட செய்தான் பார்த்திபன்

அனுபல்லவி

பன்னிரு நாட்கள் பட்டினி கிடந்து தமிழீழ
பசியால் மடிந்து போனது அவனது தேகம்

சரணம்

நல்லைக் கந்தனின் தேரோடும் வீதியில்
நம்தமிழ் மக்களின் விடியலின் பாதையில்
ஐந்து அம்ச கோரிக்கை வேள்வியில்
அந்த தியாகச்சுடரின் தேகம் எரிந்தது.

சத்தியப் போருக்கு இந்தியா என்பது — திலீபன்
சரிந்து போனதும் கலைந்து போனது
புத்தம் புதியதோர் சரித்திரம் படைத்த
புலி வீரனாய் எங்கள் திலீபன் மடிந்தான்.

— க. கேந்திரன்

# யாழ். குடாவெங்கும் பல்வேறு நிகழ்ச்சிகள்

(கொழும்புத்துறை)

தியாகதீபம் லெப். கேர்ணல் திலீபனின் 5 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தனங்கிளப்பு, தச்சன்தோப்பு கோயிலாக்கண்டி, மறவன்புலோ, நாவற்குழி, கைதடி, பகுதிகளில் உள்ள பிரதான வீதிகளில் மக்கள் ஒன்றிணைந்து சகல வீதிகளிலும் பொது இடங்களிலும் மிக அழகாக அலங்கரித்துள்ளனர்.

மேலும் இப்பகுதிகளிலுள்ள பெரும்பாலான வர்த்தக நிலையங்கள், சனசமூக நிலையங்கள், பொது இடங்கள் ஆகியனவற்றிலும் சிவப்பு, மஞ்சள் நிற கொடிகள் வீதியின் இருபக்கங்களிலும் அலங்கரிக்கப்பட்டு பறக்கவிடப்பட்டுள்ளது.

வாழை, கமுகு, தென்னை, தோரணங்கள் கட்டப்பட்டுள்ளதுடன் முக்கியமான சந்திகளில் சில இடங்களில் அலங்காரப்பந்தல்கள் மின்ஒளியுடன் பிரகாசிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

தினமும் இப்பகுதிகளில் பெரும்பாலான வீடுகளின் முன்னால் வீதி அருகில் சிறு பந்தல்கள் அமைக்கப்பட்டு தியாகி திலீபனின் திருஉருவப் படத்திற்குக் காலையில் மக்கள் அஞ்சலி செய்வதையும் மாலையில் தீப ஒளி ஏற்றியும் அஞ்சலி செலுத்தி வருவதையும் காணக்கூடியதாக உள்ளது.

இதேநேரத்தில் சில பந்தல்களில் திலீபனைப் பற்றிய வீடியோ படக்காட்சிகளும், அவரைப்பற்றிய உரைகளும் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (151)

### வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமள் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 27ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. (56)

வங்கி

## முகாமையாளர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைவங்கிசாவகச்சேரிக் கிளையின் முகாமையாளராகக் கடமை புரிந்துவந்த திரு. ம. வாமதேவா இலங்கை வங்கி மானிப்பாய்க் கிளையின் முகாமையாளராக கடமை ஏற்றுள்ளார்.

மானிப்பாய்க் கிளையின் முன்னாள் முகாமையாளர் திரு இ. துரைராஜா யாழ்ப்பாணம் இலங்கைவங்கியின் மாவட்ட அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

# சிரமதானம் மூலம் குளம் துப்பரவு

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை மகாஜன சனசமூக நிலையத்தினர் தியாகி திலீபனின் 5வது ஆண்டு நினைவு தினத்தை யொட்டி ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயத்தின் முன்பாகவுள்ள குளத்தினை சிரமதான முறையில் புனரமைப்புச் செய்து வருகின்றனர்.

கடந்த 19ந் திகதி முதல் தொடர்ந்து இடம் பெற்று வரும் இச் சிரமதானப்பணியில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கலந்துகொண்டுகாலை முதல் மாலைவரை தமது பங்களிப்பை செய்து வருகின்றனர்.

நவாலி, ஆனைக்கோட்டை மானிப்பாய் பகுதியிலுள்ள அகதிமுகாம்களின் முன்பாகவும் தியாகி திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டுவருவதை காணமுடிகிறது.

வலிமேற்கு வலி வடக்கு பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வந்து மேற்படி பகுதியிலுள்ள முகாம்களில் தங்கியிருக்கும் மக்கள் தமது முகாம்களுக்கு முன்பாக சிறிய பந்தல்கள் அமைத்து திலீபனின் உருவப்படங்களை வைத்து விளக்கேற்றி அஞ்சலிசெலுத்தி வருகின்றனர். (71)

அகதிமுகாம் குடிசைகளிலிருந்து —

# வெளியேறிய 86 குடும்பங்களுக்கு புதிய குடிசைகள் வழங்கப்படும்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பத்திமாதா ஆலய அகதி முகாமிலிருந்து அண்மைய இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து சென்றுள்ள குடும்பங்களுக்கு புதிய குடிசைகள் நிறுவிக் கொடுக்கப்படவுள்ளது.

மேற்படி முகாமிலிருந்து இடம்பெயர்ந்துசென்றவர்கள் தங்களின் விபரங்களை தமது அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறு செஞ்சிலுவைச் சங்கத்தின் சண்டிலிப்பாய் பிரதேச அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

பண்டத்தரிப்பு பத்திமாதா ஆலயத்திற்கு முன்பாகவுள்ள காணியில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் 86 குடிசைகள் நிறுவப்பட்டு கடந்த ஆண்டில் 86 குடும்பங்கள் அங்கு குடியமர்த்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதம் இளவாலை, மாதகல் பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் இவர்கள் அச்சமடைந்து தங்கள் குடிசைகளை கைவிட்டு பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். (72)

## பண்டத்தரிப்பு கோட்டத்தில் நினைவு தினம்

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தினர் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தியாகி திலீபனின் நினைவுதினத்தை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். வி. மகேசவேள் தலைமையில் கொண்டாடினர்.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்சேர்ந்ததைச் கொத்தணி அதிபர்கள், பாடசாலை அதிபர்கள், காரியாலய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்ட இந்த வைபவத்தில் விடுதலைப்புலிகள் மாணவர் பேரவைப்பொறுப்பாளர் திரு சத்தியா இணைப்பாளர் திரு. பொன்னம்பலம ஆகியோர் உரைநிகழ்த்தினர். (139)

## மாணவர் சஞ்சிகை

(புலோலி)

மாணவர்களுக்கென போரூட் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுவரும் 'ஒளி' என்ற காலாண்டுச் சஞ்சிகை மீண்டும் வெளிவந்துள்ளது (61)

தியாகி திலீபன் —

# திருவுருவப் படத்திற்கு மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தியாகிதிலீபனின் ஐந்தாவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சிகளில் நேற்று முன்தினம் ஆறுவது நாளாக மக்கள் பெருமளவு கலந்து கொண்டு சிறப்பித்ததோடு அஞ்சலிகளையும் செலுத்தினர்.

யாழ் குடா எங்கும் இடம்பெற்று வரும் உண்ணா நோன்பு விரதத்தில் பெருமளவுமக்கள் கலந்து கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் பல்வேறு இடங்களில் நடைபெற்று வந்த உண்ணாவிரத நிகழ்ச்சிகளில் பெரும் தொகையான மாணவர்கள் சிறுவர்கள் கலந்து கொண்டனர்.

தியாகி திலீபனின் நினைவாக மாணவர் அமைப்பினால் குடாநாட்டின் பல்வேறு இடங்களில் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ். போதனா வைத்தியசாலையில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் வளவுகளை சுத்தப்படுத்தி துப்பரவாக்கினர்.

காலையிலிருந்து நண்பகல் வரையில் தனியார் கல்வி நிறுவனமாணவிகளும் சேர்ந்து சிரமதானப்பணியை மேற்கொண்டனர்.

போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு சென்று பல மாணவர்கள் திலீபன் நினைவாக இரத்ததானம் செய்தனர்.

சாம்சன் குடியிருப்புப்பகுதிகளில் சிரமதானப்பணியும சங்கானை வடக்கு பிரிவில் மூளாய் செல்வா சனசமூக நிலையவீதி திருத்தும் பணிகளும், கோப்பாய் வட்டப்பிரிவில்உரும்பராய் சந்தை திருத்தும் பணிகளும் நடைபெற்றன. (56)

## சுதுமலையில் உண்ணாவிரதம்

(பண்டத்தரிப்பு)

தியாகி திலீபனின் 5ஆவது நினைவை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமையன்று சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலய முன்றலில் முழுநாள் உண்ணாவிரதம் நடைபெற்றது.

இந்த உண்ணாவிரதத்தில் இப்பகுதியிலுள்ள கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்கள் உட்பட பெருந்தொகையான மாணவர்கள் கலந்து கொண்டனர். (72)

# 'கறுப்புச்சாவு' தாக்குதல் காஷ்மீரில் புதிய அமைப்பு

[ஸ்ரீநகர்]

ஜம்மு-காஷ்மீரில் காஷ்மீரிகள் அல்லாத இந்தியர்கள் மீது 'கறுப்புச்சாவுதாக்குதல்' எனும் புதிய தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தாக்குதலில் இதுவரை நாலு இந்துக்கள் கொல்லப்பட்டுள்ளனர், இத்தாக்குதலை முஸ்லிம் பிறதர் கூட்' என்னும் அமைப்பே நடாத்தி வருகிறது.

மேலும் ஜம்மு-காஷ்மீரிலிருந்து இன்று செவ்வாய்க்கிழமைக்குள் காஷ்மீர் அல்லாத இந்தியர்கள் வெளியேறிவிடவேண்டுமென இந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

இதையடுத்து பெருமளவு இந்துக்கள் காஷ்மீரிலிருந்து வெளியேறத் தொடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# ஜேர்மன் துப்பாக்கியாலேயே இன்ஸ்பெக்டர் சுடப்பட்டார்

(சென்னை)

மதுரைக்கு அருகில் சுட்டுக் கொல்லப்பட்ட சப் இன்ஸ்பெக்டரின் கொலைக்கு ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கியே பயன்படுத்தப்பட்டுள்ளதாக தமிழக காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர் தேவாரம் தெரிவித்துள்ளார்.

சம்பவம் நடந்த இடத்திலிருந்து பெறப்பட்ட வெற்றுத் தோட்டாக்களிலிருந்து இது தெரியவந்துள்ளது. கைத்துப்பாக்கியிலிருந்த 12 தோட்டாக்களும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கொலையாளிகள் யார் என்பது இன்னும் புலனாகவில்லை. கொலையாளி வந்த ஓட்டோவின் சாரதி தற்போது விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் திரு தேவாரம் தெரிவித்தார்.

மேலும் தமிழககாவல்துறையில் தொய்வு ஏற்படவில்லை என்றும், இச்சம்பவத்தைத் தொடர்ந்துஇனி இரவு நேரத்தில் ரோந்துசெல்லும் காவலர்கள் துப்பாக்கிகளை எடுத்துச் செல்லவேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் கூறினார். (சி)

# 18ம் திகதி மோதலில் இராணுவத்திடம் சிக்கியவர்கள்

(ஏழாலை)

அளவெட்டி பத்துப்பனைய டிப் பகுதிக்கு வந்த இராணு வத்தினர் புலிகளின் கடும் எதிர்ப்பிற்கு ஈடுகொடுக்கமுடி யாமல் பின்வாங்கியபோது அப்பகுதியிலுள்ள பொதுமக் கள் பலரை தம்முடன் கைது செய்து கொண்டு சென்றுள்ள னர்.

கடந்த 18ம் திகதி இடம் பெற்ற இச்சம்பவத்தில், நட ராஜா மகாலட்சுமி, குமார சாமி, கோபாலசாமி, கு. சோமாவதி, கு. கனகாம் பிகை ஈசன் ஆகியோர் இரா ணுவத்திடம் சிக்கி இன்னும் மீளவில்லையென்றும் இவர்கள் பற்றி செஞ்சிலுவைச்சங்கத் தில் முறையிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. [162]

## 1,050 அகதிகள் திரும்பினர்

(சென்னை)

1050 இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று சென்னையி லிருந்து திருமலைக்கு கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்பட் டுள்ளதாக தமிழக முதன்மை ஆணையாளர் ரி. என். ராம தாஸ் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் 27 400 இலங் கைத்தமிழ் அகதிகள் கப்பல் மூலமும் விமான மூலமும் அனுப்பபட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள் ளார். [க]

# மரண அறிவித்தல்

## வீர மரணம்

### வீர வேங்கை வேலன் (கிறீஸ்)

(வீணுகோபால் கிருஷ்ணகுமார்)

(புலோலி)

புலோலி புற்றளையைச் சேர்ந்த வீணுகோபால் கிருஷ்ணகுமார் 'மாயவன்' கடந்த சனிக்கிழமை (19-9-92) ஆனையிறவில் இடம்பெற்ற இராணுவ நேரடி மோதலில் வீரமரணம் எய்தினர். இவர் கணபதிப்பிள்ளை வீணுகோபல் (அதிபர்-குடத்தனை அ. த. க. வித்தியாலயம்), திருமதி சின்னம்மா ஆகி யோரின் அன்பும் புதல்வனும், கிருஷ்ணவேணி (நீதி மன்றம், பருத்தித்துறை), கிருஷ்ணகோபால் (அப் பன் கூரிற்சரிலாந்து, கிருஷ்ணபாமா (நிர்மாணத் துறை திணைக்களம் வட - கிழக்கு மாகாணசபை, திருகோணமலை), கிருஷ்ணபகவான் (சண்ணன்-குகன் ஸ்ரூடியோ, சாவகச்சேரி, கிருஷ்ணராஜா (யாழ். பல்கலைக் கழக 1ம் ஆண்டு விஞ்ஞானபீட மாணவன்), கிருஷ்ணரூபன் முரளி', கிருஷ்ணசூரி யன் (வாசன்), கிருஷ்ணசந்திரா (வாமதி, யா/புற்ற ளை மகாவித்தியாலயம்) ஆகியோரின் சகோதரனும் மு. சண்முகராஜா (T A நீர்ப்பாசனத் திணைக் களம்-வவுனிக்குளம்), ப. தயாபரன் (திருகோண மலை) ஆகியோரின் மைத்துணரும், யதுகுலன், அச்சுத கோபி ஆகியோரின் மாமனுருமாவார். இறுதிக் கிரியைகள் இன்று (22-09-92) காலை 8-00 மணிக்கு நடைபெற்று மாவீரர் மயானத்தில் விதைக்கபடும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

''வேணி இல்லம்''
புலோலி.
(22-9-92

பெற்றோர்

(சி- 6828)

### திருமதி செல்லையா தங்கம்மா

(மண்கும்பான்)

மண்கும்பானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற் போது 213, கஸ்தூரியார் வீதியில் (லலிதா மாளிகை) வசிப்பவருமாகிய செல்லையா தங்கம்மா காலமாகி விட்டார். அன்னர் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வீரசிங்கம், இந்திர சித்து (லலிதா மாளிகை), தங்கமலர், சிவலிங்கம், சிவபாதலிங்கம் (நகை மாளிகை), மல்லிகாதேவி ஆகி யோரின் அன்புத் தாயாரும், நடராஜா (மைதிலி மாளிகை), பூலோகநாதன் (ஸ்ரீ குமரன்ஸ் ஸ்ரோர்ஸ் நாரம்மல), காலஞ்சென்ற நாகம்மா, மகாலெட்சுமி, யோகேஸ்வரி, மகுடராணி ஆகியோரின் அன்பு மாமி யாரும் ஆவார்.

பூதவுடல் இறுதிக் கிரியைக்காக அன்னரின் இல்லத் திலிருந்து இன்று 22-9-92 பிற்பகல் 3-00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கிறோம்.

தகவல்:
செல்லையா சிவபாதலிங்கம்
(மகன்)
(வைரக்கல் நகை வியாபாரம்)
218 A கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

213, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6829)

## ஆசிரியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

சகல ஆசிரியர்களினதும் புரட்டாதி மாதச் சம்பளம் பணமாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. சகல பாடசாலை அதிபர்களும் வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு இலங்கை வங்கி, யாழ். மேற் றரக் கிளை பிரதான முகாமை யாளரால் வேண்டப்படுகின் றனர்கள்.

## மண்கிண்டி

1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடுத்தர ரவைகள் 2,050, லிங்குடன் ரவைகள 396, ரி 56 ரக ரவைக் கூடுகள் 6, ஜே ஆர் கைக்குண்டுகள் 11. ஏ கே ரவைக் கூடு தாங்கிகள் 2, இராணுவகவசதொப்பிகள் 6, இராணுவச் சப்பாத்து 2 சோடி, இராணுவப் பட்டி 1 ஆகிய இராணுவத் தளபாடங் கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. (ரி)

## 20 நவீன

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடுகள்-6

- ★ 40 மி. மீ. பிஸ்டல் -1
- ★ ரி 81 ரக துப்பாக்கிகள்-2
- ★ அதற்குரிய ரவைக் கூடுகள் - 5
- ★ ரி 56 ரக துப்பாக்கிக - 15
- ★ அதற்குரிய ரவைக் கூடுகள் - 45
- ★ 40 மி. மீ ஷெல்கள்- 10
- ★ நடுத்தரரவைகள் - 304
- ★ லிங்குடன் ரவைகள்-332
- ★ ஏ. கே. ரவைக் கூடு தாங்கிகள் -07
- ★ ராணுவ பைகள் - 2
- ★ சப்பாத்துகள் 3 சோடி
- ★ ராணுவ தொப்பி

ஆகிய ராணுவ தளபாட ங்கள் கைப்பற்றப்பட்டன. (ரி)

## புலிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிசார் தப்பி ஓடிவிட்ட தாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் தாக் குதலைத் தடுப்பதற்காக வவுனியாவில் இருந்து 400 இராணுவத்தினரும், 30 பொலிசாரும் இக்கிராமத் திற்கு அனுப்பபட்டிருந்த னர்.

ஆனல் தங்களுடைய உயி ருக்கு அஞ்சி, இந்த 13 பொலி சாரும் தங்களது சீருடையை மாற்றிவிட்டு, சாதாரண பொதுமக்கள்போல் உடை அணிந்து வெளியேறி லொறி ஒன்றைக் கடத்தி அதில் தப்பிச் சென்றுவிட்டனராம்.

தப்பி ஓடிய பொலிசார், சோதனை நிலையம் ஒன்றில் பிடிபட்டதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

## புலிகளின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யினர் ஸ்தலத்திலேயே கொல் லப்பட்டனர்.

புலிகளின் அதிரடியில் சிக் குண்ட படையினரை மீட்ப தற்கு நாவலடியிலிருந்து மூன்று கவச வாகனங்களில் வந்த படையினர் மீது விடுத லைப்புலிகளின் மற்றொரு பிரி வினர் நிலக் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலைஅடுத்து நாவ லடி இராணுவத்தினர் முன் னேற முடியாது புறப்பட்ட இடத்திலே தரித்து நின்றனர்.

இப்பகுதியில் மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஹெலிகொப்டரிலி ருந்து தொடர்ச்சியாக 50 கலி பர் தாக்குதல் நடத்தப்பட் டது.

இச்சம்பவத்தில் படையின ருக்கு ஏற்பட்ட உயிரிழப்பை பாதுகாப்பு வட்டாரங்களும் நேற்று ஊர்ஜிதம் செய்தன.

இதேவேளை திருமலைப் பகுதி யில் நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் நடத்திய மற்றொரு தாக்குதலில் ஒன்பது படை யினர் உயிரிழந்துள்ளதாக இந்திய வானொலி தெரிவித் தது. இத்தாக்குதல் தொடர் பாக மேலதிக விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. (வீ - க)

# வீர வேங்கை வேலனுக்கு மக்கள் கண்ணீர் அஞ்சலி

(பருத்தித்துறை)

வெற்றிலைக்கேணியில் நேற்று முன்தினம் நடைபெற்றமோத லில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை வேல னின் (கிறீஸ்) (வீணுகோபால் கிருஷ்ணகுமார்) புகழுடம்பு புலோலியிலுள்ள இல்லத்தில் பொது மக்கள் அஞ்சலிக்காக நேற்று வைக்கப்பட்டிருந்தது.

பெருந்தொகையான பொதுமக்கள் வீரவேங்கை வேலனுக்கு தமது இறுதி அஞ்சலிகளைச் செலுத்தினர்.

இன்று காலை புலோலிச் சந்தியில விசேடமாக அமைச் கப்பட்ட பந்தலில் அவரது புகழுடம்பு பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வடமராட்சி மாவீரர் துயி லும் இல்லத்தில் விடுதலைப் புலிகளின் இறுதி மரியாதை யுடன் விதைக்கப்படுமென் றும தெரிவிக்கப்பட்டுள்ளது. (52)

## 3 புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தம்பி தயாபரன் ஆரையம் பதி, கலாகரநாதன் (இராச லிங்கம் விஜயகுமார் கல் லிச்சை), லெப். இலக்கியன் (குமாரசாமி கஜேந்திரகுமார் கொடிமாந்துறை) ஆகிய போராளிகள் வீரச்சாவு அடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ள னர். (ரி)

## தொண்டர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சேரியில் நாளை 23ம் திகதி பி. ப 1. 30க்கும், பருத்தித் துறையில் 24ம் திகதி மு. ப 8. 30 க்கும் பண்டத்தரிப் பில் 25ம் திகதி மு. ப. 8.30 க்கும் வேலணை கோட்டம் இம்மாதம் 26ம் திகதி மு. ப 8. 30க்கும் இதேநாளில் யாழ்ப்பாணக்கோட்டம் மு ப 11. 00 மணிக்கும் மருதனா மடம் 27ம் திகதி மு. ப 8-30 க்கும் நடைபெறும்.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம். கல்வித் தகமை அத்தாட்சிப் பத்திரங் கள். க.பொ. த (சா/ த). க. பொ. த. (உ/த) பிரதி சுள் கிராம சேவை உத்தி யோகத்தரின் அத்தாட் சிப்பத்திரம் தொண் டர் ஆசிரியராக நியமிக்கப் பட்ட திணைக்கள அனுமதிக் கடிதங்கள் தற்பொழுது தொடர்ந்து கடமையாற்று தல் தொடர்பான அதிபரின் உறுதியுரை ஆகிய ஆவணங் களின் மூலப்பிரதிகள்கொண்டு வரவேண்டு மன்று கேட்கப் பட்டுள்ளார்கள் (ரி)

## தடுத்து

(1-ம பக்கத் தொடர்ச்சி)

குமார் நீர்வேலிறேட், மாதர் கடை புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சின்னையா சிவராசா, உடையார் வீதி தாவளை இயற் றாளை கொடிகாமம், செல் லையா நவரத்தினம் புலோலி கிழக்கு தம்பிராசா ஹரேந் திரன் தேவராளி கரவெட்டி, சுதிரன் சிவலிங்கம் கைதடி தெற்கு, அந்தோனிப்பிள்ளை ஜோர்ஜ சிம்மகன் குருநகர், செல்வராசா ஸ்ரீபாஸ்கரன் வரணி இடைக்குறிச்சி, கிருஷ்ணபிள்ளை சிவபாதம் 17/2 புதிய வீதி யாழ்ப்பா ணம், கந்தசாமி நாக மணிமாறன் கொடி காமம், துரைராசா ஸ்ரீதரன் கொக்குவில், சுந்தரராசா சுகுமார் மானிப்பாய், சேனதி ராசா புனிதராசா நவாலி தெற்கு, வின்சென்ட் விக்லி யம் மரியதாஸ் தேவரணி சுன் னாகம், முத்துக்குமார் பரம நாதன சுள்ளனை சுன்னாகம், இரத்தினம் தேவராசா தாவடி, யோசப் பிரேமதாச கீரிமலை றேட் காங்கேசன் துறை, துரைரத்தினம் ராஜ குமார் பழைய வீதி கோப் பாய் தெற்கு, செபமாலை இம்மானுவேல் மத்தியூ வீதி யாழ்ப்பாணம், பாலசிங்கம் பேரின்பம் நவாலி தெற்கு, குட்டியன் அப்புத்துரை கராச் லேன் சண்டிலிப்பாய், நகுலன் சின்னத்தம்பி கைதடி தெற்கு, சிவராசா மோகன ராஜா தாவடி மானிப்பாய் பொன்னுத்துரை சிவராசேஸ் வரன் வீரபத்திரர் கோவிலடி கோம்பாய் தெற்கு. (சு)

## 20 சிப்பாய்களுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புச் செய்திகள் தெரி விக்கின்றன.

ஜே. வி. பி யின் நடவடிக் கைகள் அதிகரித்திருந்த வேளையில் சொந்தப் பகைமை யைத் தீர்ப்பதற்காக தனி நபர் கொலைகள், ஆட்கடத்தல் போன்ற சம்பவங்களில் இந்த 20 இராணுவத்தினரும் ஈடுபட் டமையையடுத்தே விசாரணை கள் ஆரம்பமாகவுள்ளதாகவும் அச்செய்திகள் மேலும் தெரி வித்துள்ளன. (க)

## சிறிமாவைப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றுகையில் மேற் கண்டவாறு அவர் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்: தம்முடன் போட்டியிட வருமாறு அவர் எனக்குச் சவால் விட்டுள்ளார். எப் பொழுது, எந்த நேரத்தில் அவருடன் போட்டியிட வேண்டுமோ. அப்பொழுது அவருடன் போட்டியிடுவதாக வும் அவரை எப்படி வெற்றி கொள்வது என்பது தமக்குக் தெரியும் என்றும் அவர் கூறிப் பிட்டுள்ளார். (க)

## 2100 அடையாள

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வடையாள அட்டை களைப் பெற்றுக்கொள்வதற் காக யாரும ஆட்பதிவுச் செய லகத்துக்கு வருகைதர வேண் டாம் என்றும், உரியமுறை யில் அவை தபால் மூலமோ, உதவி அரசாங்க அதிபர் மூலமோ, பாடசாலை அதிபர் மூலமோ விநியோகிக்கப்படு மென்றும், யாருக்கும் அடை யாள அட்டைகள் நேரில் வழங்கப்படமாட்டாது என் றும் செயலகத்தில் இதற்குப் பொறுப்பான உத்தியோகத் தர் தெரிவித்தார். (101)

## படகு கடத்தல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பலர் நிறுத்தப்படவுள்ளனர்.

இது குறித்து ஆரம்ப விசா ரணைகளை மேற்கொண்ட கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளான்ஸி பெர் ணண்டோ இத்தகவலைத் தெரிவித்தார்.

புலிகளால் கைப்பற்றப்பட்ட படகை மீட்காதபடியால், இதனைக் கைப்பற்றியவர்களைக் கண்டுபிடிக்கத் தவறியதை யும் அடுத்தே இந்தப் படகு காணமற்போனதற்குப் பொறுப்பானவர்கள் இரா ணுவ நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவுள்ளனர். (சி)

## இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வென தெரிவித்த அவர் குறிப்பிட்ட ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்ட பின்னர் சுமார் மூன்று மாத காலம் வடக்கு -கிழக்கில் சமாதானம் நிலவியது என்றும் பின்னர் விடுதலைப்புலிகள் அரசபடை யினர் மோதல் ஏற்பட்டது. ஜனதிபதி பிரேமதாசா இந் தியப்படையைவாபஸ் பெறும் படி கேட்டதையும் குறிப் பிட்ட அவர் ஒப்பந்தத்தின் சகல அம்சங்களும் நிறை வேற்றப்பட்டதாகவும் கிழக்கு மாகாணத்தில் சர்வ ஜனவாக்கெடுப்பு மேற்கொள் ளப்படவில்லையென்றும் குறிப் பிட்டார். (க)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தா ரால் யாழ்ப்பாணம் இலங்கோவில் வீதி இல் அச்சிடப்பட்டு 1992-ம் ஆண்டு செப்டம் பர் மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under licence Number B/16336/